இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

YESUVAI THINAM PARKIREN

VOL 26 ISSUE 03 MARCH 2026

ஆண்டு சந்தா 100/- தனிப்ப்ரதி 10/-



## தேவனுக்கேற்ற இருதயம்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

## செம்பட்டியில்

13,14 மார்ச் 2026
வெள்ளி, சனி

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 2.30 மணி வரை

இடம் : வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

தொடர்புக்கு
94428 00449, 94980 00449



EVG.L.வின்சென்ட்ராஜ்
EVG.கலா வின்சென்ட்ராஜ்

## கோவையில்

# லெந்து கால கன்வென்ஷன் கூட்டம்

நாள் :
6,7,8
மார்ச் 2026
வெள்ளி, சனி, ஞாயிறு

தினமும் மாலை 6.00 மணிக்கு

இடம் தூய இம்மானுவேல் ஆலயம், அவினாசி ரோடு,
கமிஷனர் அலுவலகம் அருகில், உப்பிளிப்பாளையம்,
கோவை மாவட்டம்

தேவ செய்தியாளர்கள்

Evg.L.வின்சென்ட்ராஜ்
Evg.கலா வின்சென்ட்ராஜ்



தொடர்புக்கு : 94428 00449, 94980 00449



# ஆசிரியர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் நல்லவர் கிருபையும் இரக்கமும் உள்ளவர். சங் 130:7 சொல்லுகிறது கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு என்று. திரளான மீட்பும், இரட்சிப்பும் அவரிடத்தில் உண்டு. அந்த இரட்சிப்பை, மீட்பை முழு உலகமும் அறிந்து கொள்ளத்தான் நாம் இன்றைக்கு ஊழியம் செய்கிறோம். ஆகவே நாம் செய்கிற எந்த ஊழியத்திலும் திரளான மன்னிப்பும், இரட்சிப்பும் உண்டாக ஜெபிக்க வேண்டும். கடந்த பிப்ரவரி 5,6,7 தேதிகளில் திருப்பத்தூரில் நடைபெற்ற பரிசுத்த உபவாச முகாமை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். கர்த்தருடைய மகிமையும், வார்த்தையும், வல்லமையும் வெளிப்பட்டது. அதேபோல் செம்பட்டி வானத்தின் வாசலில் நடைபெறும் ஆசீர்வாத உபவாச கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வழி நடத்தி வருகிறார். தொடர்ந்து மதுரையில் நடைபெறும் உபவாச ஜெபங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு சித்தமானால் வருகின்ற ஏப்ரல் 30, மே 1,2ஆகிய தேதிகளில் வானத்தின் வாசலில் வைத்து சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாம் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. விடுமுறை நாட்களில் அதிலே கலந்து கொள்ள உங்களை அன்போடு அழைக்கிறோம். இதைப் பற்றி மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தி அவர்களும் கலந்து கொள்ள உற்சாகப்படுத்துங்கள். அதேபோல் நம்முடைய மீடியா ஊழியங்களுக்காகவும், அலுவலகத்திற்கு உதவி செய்ய தகுந்த ஆட்கள் கிடைக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து இந்த பத்திரிக்கை தடையில்லாமல் வெளிவரவும் இதன்மூலம் கர்த்தருடைய வார்த்தை மகிமை அடைந்து, பரவவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபத்தாலும், உதாரத்துவமான காணிக்கையினாலும் தாங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை உங்கள் அனைவரோடு இருப்பதாக.

**இயேசுவின் பணியில்**

**(சகோ.L.வின்சென்ட்ராஜ்)**

சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்



# தேவனுக்கேற்ற இருதயம்

**அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி, அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும். உபாகமம் 5:29.**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு மனிதனுடைய வாழ்க்கை இன்றியமையாதது. அவனுடைய இருதயம் நன்றாக இருந்தால் அவன் எல்லாவற்றிலும் நன்றாக இருப்பான். அவன் இருதயம் சரியில்லை என்றால் அவன் சரியாக இருக்க மாட்டான். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். **லூக்கா 6:45-ல் நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்தில் இருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்றார்.** எவ்வளவு ஒரு அருமையான வார்த்தையை தேவன் நமக்கு வேதத்தில் சொல்லி இருக்கிறார். இன்றைக்கு தேவனுக்கு ஏற்ற, பிரியமான இருதயம் மனிதர்களுக்கு இருக்க வேண்டும். அசுத்தம் நிறைந்த, அழுக்கு நிறைந்த, அருவருப்பான இருதயம் நமக்கு இருக்கக் கூடாது.

தாவீதைப் பற்றி ஆண்டவர் வேதத்தில் என்ன சொல்லி இருக்கிறார் பாருங்கள். **அப் 13:22-ல் ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாக கண்டான். எனக்கு சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்து சாட்சியும் கொடுத்தார்** என்று வேதம் சொல்லுகிறது. ஆம் தேவனுக்கு ஏற்ற இருதயம், நல்ல இருதயம், மென்மையான இருதயம், பரிசுத்தமான இருதயம் நமக்கு வேண்டும். ஏனென்றால் வாழ்வே

அதிலிருந்து தான் புறப்படுகிறது, உருவாகிறது. இருதயம் சரியாய் இருந்தால் எல்லாம் சரியாய் நடக்கும். இதைத்தான் வேதத்தில் பல இடத்தில் பார்க்கிறோம். சாலமோன் ஞானி கூட இதை தான் சொல்கிறார். **நீதி 4:23-ல் எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள். அதினிடத்திலிருந்து ஜீவஊற்று புறப்படும்** என்று ஆவியானவர் மூலமாக சொல்லி இருக்கிறார். நம் வாழ்வு இருதயத் திலிருந்து தான் புறப்படுகிறது, ஆகவே நம்முடைய இருதயம் எப்பொழுதும் தேவனுக்கு முன்பாக செம்மையானதாக இருக்க வேண்டும், சரியானதாக, பரிசுத்தமானதாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட இருதயத்தை தான் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார், விரும்புகிறார். இதுதான் தேவனுக்கு ஏற்ற இருதயம். இதை வேதம் பல்வேறு விதங்களில் சொல்லு கிறது. மனம், ஆத்தும, சிந்தை என்று சொல்லுகிறது. தேவன் கொடுத்த இந்த இருதயத்தை பாதுகாக்கவும், பண்படுத்த வும், அடக்கி ஆளவும் நமக்கு தெரிந்திருக்க வேண்டும்.

ஆதாமுக்கும், ஏவாளுக்கும் தேவன் முதலாவதாக இந்த கட்டளையைத் தான் கொடுத் தார். (ஏதேன்) இந்தத் தோட்டத்தை காக்கவும், பண்படுத்தவும் வைத்தார் என்று ஆதி 2:15-ல் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் நாம் வாழும் இந்த பொல்லாத உலகில் அசுத்தங்கள், அருவருப்புகள், அசுத்த ஆவியின் கிரியைகள் நம்மை தாக்கி கொண்டே இருக்கிறது. தேவனை விட்டு பிரிக்கப் போராடுகிறது. இதற்கு கதவு போட்டோ, வாட்ச்மேன் போட்டோ பாதுகாக்க முடியாது.

நம்மை நாமே காத்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் வேதத்தில் **உன் 1:6-ல் என்னைத் திராட்சத் தோட்டங்களுக்கு காவற்காரியாக வைத்தார்கள். என் சொந்த திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை** என்று, நான் எப்படி தவறினேன், எப்படி தேவனை விட்டு பின் வாங்கினேன் என்பதை சாலமோன் ஞானி சொல்லுகிறார். பாருங்கள் இப்படிப்பட்ட நிலையில் நாம் விழிப்பாய் இருந்து நம்முடைய ஆத்துமாவை காக்கவில்லை என்றால் நம் இருதயம், ஆத்துமா அழிந்து விடும், செயலிழந்து தேவனை பற்றிய உணர்வு இல்லாமல் போய் விடும், மாண்டு மடிந்து போகும்.

இதைத்தான் ஆண்டவராகிய இயேசு சொல்லு கிறார் **மத் 16:26-ல் மனுஷன் உலகம் முழுவதை யும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை, ஆத்துமாவை, இருதயத்தை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தை கொடுப் பான் என்றார்.**

நாம் இந்த உலகத்தை விட்டு கடந்து, தேவனுடைய நித்தியத்திற்குள் கடந்து போகும்போது இந்த ஆத்துமாவை, இருதயத்தை அவரிடத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

நாம் தேவனுடைய வாழ்வை, நித்திய ஜீவனை இழந்து விடாமல் நம் இருதயத்தை, ஆத்துமாவை அடக்கி வாழத் தெரிந்திருக்க வேண்டும். காரணம் நாம் இந்த உலகத்தை விட்டு நாம் தேவனுடைய வாழ்வை, நித்திய ஜீவனை இழந்து விடாமல் நம் இருதயத்தை, ஆத்துமாவை அடக்கி வாழத் தெரிந்திருக்க வேண்டும். காரணம் நாம் இந்த உலகத்தை விட்டு கடந்து, தேவனுடைய நித்தியத்திற்குள் கடந்து போகும்போது இந்த ஆத்துமாவை, இருதயத்தை அவரிடத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும். அதிலே எந்த பழுதும், எந்த பாதிப்பும் இல்லாமல் இருக்க வேண்டும். இதை தான் இயேசு இந்த பூமியில் வாழ்ந்து, ஓட்டத்தை முடித்த போது செய்தார். **லூக்கா 23:46 இயேசு, பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன் என்று மகா சத்தமாய் கூப்பிட்டு சொன்னார். இப்படி சொல்லி**

**ஜீவனை விட்டார்** என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் நம்முடைய ஆத்துமாவை இருதயத்தை எந்த பழுதும் இல்லாமல், சேதமில்லாமல் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும். இதற்காகத்தான் இயேசு தன்னுடைய இருதயத்தை, ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி ஜெபித்தார். **ஏசா 53:12-ல் அவர் தம்முடைய ஆத்துமாவை, இருதயத்தை மரணத்தில் ஊற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அனைவருடைய பாவத்தை தாமே சுமந்து கொண்டார்.**

நமக்காக அவருடைய இருதயம், ஆத்துமா குத்தி கிழிக்கப்பட்டது, நொறுக்கப்பட்டது. எதற்காக நம்முடைய இருதயத்தை சரி செய்வதற்காக, நம்முடைய ஆத்துமாவை சரி செய்வதற்காக அவர் சிலுவையில் பாடுபட்டார். அவருடைய இருதயம் குத்தி கிழிக்கப்பட்டது. **யோவான் 19:34-ஐ வாசித்துப் பாருங்கள் ஆகிலும் போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். இருதயத்தில், ஆத்துமாவில் குத்தினான். உடனே இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது.** இன்றைக்கு அதிலிருந்து புறப்பட்ட இரத்தமும் நீரும் ஒரு மனிதனுடைய இருதயத்தை சரி செய்ய முடியும், தூய்மைப்படுத்த முடியும், புதிய இருதயமாக, ஆத்துமாவாக மாற்ற முடியும். இதற்குத்தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து, நமக்காக இரத்தம் சிந்தி, நம்மை மீட்டுக் கொண்டு, அவருடைய பிள்ளையாக, அவருக்கு ஏற்ற இருதயம் உள்ளவர்களாக மாற்ற, வாழ வைக்க வந்தார். அவர் வந்தால் இன்றைக்கு தேவனுக்கு ஏற்ற இருதயம் நமக்கு உண்டாயிருக்கும். ஆம் நமக்கு ஏற்ற இருதயம் அல்ல, அவருக்கு ஏற்ற இருதயம் உண்டாக ஜெபிக்க வேண்டும். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களுக்கு அவருக்கு ஏற்ற இருதயத்தை கொடுப்பாராக. போகட்டும் மனிதர்களுடைய இருதயம் எப்படி எல்லாம் இருக்கிறது? அதை தேவன் எப்படியெல்லாம் மாற்றுகிறார் என்பதை பார்ப்போம்.

> **இன்று அவருடைய சத்தத்தை கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள் என்றார்**

## கடின இருதயம்

**யாத் 7:13 பார்வோனின் இருதயத்தை கடினமாக்குவேன் என்றார். கர்த்தர் சொன்னபடி பார்வோனின் இருதயம் கடினப்பட்டது.** உலகத்திலே மோசமான இருதயம் எந்த மருத்துவத்தாலும், எந்த விஞ்ஞானத்தாலும் காப்பாற்ற பாதுகாக்க முடியாத இருதயம் கடின இருதயம். அதை தான் வேதம் கல்லான இருதயம் என்று சொல்லுகிறது. எவ்வளவு தான் அடி வாங்கினாலும் திரும்பத் திரும்ப போராட்டம் வந்தாலும் மனம் திரும்ப மாட்டார்கள். ஈவு இரக்கம் இருக்காது, அன்பு இருக்காது, மற்றவர்கள் மேல் பரிதாபம் இருக்காது, கல் நெஞ்சமாய் இருப்பார்கள். சுயநலவாதியாக நான் நன்றாக இருந்தால் போதும் என்று நினைப்பார்கள். தேவனால் பார்வோன் பலமுறை எச்சரிக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டு ஜனங்களை போகவிடாமல் தடுத்து, தேவனுடைய திட்டத்திற்கும், சித்தத்திற்கும் எப்பொழுதும் எதிர்த்து நின்றான். அதனால் அவன் அழியவும் மூழ்கவும் தேவனுடைய தண்டனைக்கு உள்ளாகவும் தேவன் அனுமதித்தார். இன்றைக்கு அந்த கடின இருதயம் நமக்கு இருக்கக் கூடாது இதைத்தான் எபி 4:7-ல் பார்க்கிறோம். இன்று அவருடைய சத்தத்தை கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள் என்றார். என்ன சொன்னாலும் எத்தனை முறை வசனம் கேட்டாலும் மனம் திரும்பவே மாட்டார்கள். இதற்குப் பெயர்தான் கடின இருதயம், முரட்டு இருதயம். **ஏசாயா 46:12-ல் முரட்டு இருதயம்**

**உள்ளவர்களே நீதிக்கு தூரமானவர்களை எனக்கு செவி கொடுங்கள்** என்று ஆண்டவராகிய தேவன் இன்றைக்கு இந்த கடைசி காலத்தில் வாழுகின்ற மனிதர்களை எச்சரிக்கிறார்.

பாருங்கள் உலகம் முழுவதும் யுத்தங்கள், சண்டைகள், ஜனங்களை குருவியைச் சுடுவது போல் சுட்டுத் தள்ளுகிறார்கள், கொல்லுகிறார்கள், அழிக்கிறார்கள். உலகம், பூமி மனிதர்கள் வாழவே தகுதியற்றதாக மாறிவிட்டது. காரணம் உலகத் தலைவர்களின் பேராசை, பதவி வெறி, கடின இருதயம், முரட்டு குணம், மிருககுணம், மனிதன் மிருகமாக மாறிவிட்டான். தேவனை நம்பாத, புறக்கணித்த ராஜாக்களை பாருங்கள். அவர்களுடைய இருதயத்தை சாத்தான் எப்படி வைத்திருந்தான் தானி 4:16-ல் நேபுகாத்நேச்சர், அந்த ராஜாவின் இருதயம் மனுஷனுடைய இருதயமாயிராமல் மிருக இருதயமாக மாறும்படி தேவ தண்டனைக்கு உள்ளானான். அவனுடைய மேன்மை, மகிமை எல்லாம் பறிக்கப்பட்டு மாடுகளைப் போல் புல்லை மேய்ந்தான். மனுஷ சந்ததியிலிருந்து அவன் துரத்தப்பட்டு, ஆடு மாடுகளை போல் காடுகளில் அலைந்து புல்லைத் தின்று, வெயி லிலும், மழையிலும் நனைந்து தேவனால் தூக்கி எறியப்பட்டான். எவ்வளவு கொடூரம் பாருங்கள். இதுதான் முரட்டு இருதயம், கடின இருதயம். அதே தண்டனை அவனுடைய மகனாகிய பெல்ஷாத்சாருக்கு தேவனால் கொடுக்கப் பட்டது. இன்றைக்கு நாம் வாழும் இந்த உலகத்தில் இந்த கடைசி காலத்தில் மனிதர்களின் இருதயம் இப்படித்தான் நிம்மதியற்று, சமாதானம் இல்லாமல் அலைமோதிக் கொண்டிருக்கிறது. மனிதர்களுடைய இருதயம் சங் 92:6-ன்படி மிருககுணமுள்ளதாய் மாறுகிறது. இப்படிப்பட்ட இருதயத்தை மேன்மைப்படுத்த, சரிப்படுத்தி, தேவனுடைய சுபாவத்தை, தேவ அன்புள்ள இருதயமாக மாற்றத்தான் ஆண்டவராகிய இயேசுவின் இருதயம் நமக்காக குத்தப்பட்டது கிழிக்கப்பட்டது.

**கடின இருதயத்தை மாற்றுகிற தேவன், மென்மையான, சாந்தமான இருதயத்தை தருகின்ற தேவன்**

இன்றைக்கு அந்த ஆண்டவராகிய தேவனால் மட்டுமே நம்மை சரி செய்ய, பரிசுத்தமாக்க முடியும். அவரிடத்தில் நம்முடைய தவறை உணர்ந்து, குற்றத்தை உணர்ந்து, நம்மை சரி செய்து கொள்ள வேண்டும். நம்முடைய கடின இருதயத்தை மென்மையாக்கி தேவ அன்பினால் நிரப்பிட வேண்டும். இதற்காகத்தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். நம்மை நலமாக்கும், குணமாக்கும் தண்டனையை ஏற்றுக் கொண்டார். அவரால் நம்முடைய இருதயத்தை தேவ அன்பினாலும், மனதுருக்கத்தினாலும், கிருபையினாலும் நிரப்பி விட முடியும். **ரோமர் 5:5 சொல்கிறது மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆயினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது** என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த தேவனுடைய அன்பு நம்முடைய கடினமான இருதயத்தை கனிவுள்ள, பரிசுத்தமுள்ள, மென்மையான இருதயமாக மாற்றி விடும். இப்படிப்பட்ட இருதயம் உள்ளவர்கள் தான் தேவனுக்கு ஏற்றவர்களாய் வாழ முடியும், இருக்க முடியும். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை அப்படிப்பட்டவர்களாக மாற்றுவாராக.

## உடைந்த, நொறுங்கின இருதயம்

**நொறுங்குண்ட இருதயம் உள்ளவர்களுக்கு கர்த்தர் சமீபமாய் இருந்து நறுங்குண்ட ஆவி உள்ளவர்களை இரட்சிக்கிறார். சங் 34:18**

கடின இருதயத்தை மாற்றுகிற தேவன்,

மென்மையான, சாந்தமான இருதயத்தை தருகின்ற தேவன் அடுத்ததாக என்ன செய்கிறார் நொறுங்குண்டு இருதயங்களை புறக்கணிப்பதில்லை. சில வருடங்களுக்கு முன்பாக என்னுடைய வாகனம் பழுதுபட்டு ஒரு விதமான சத்தம் உண்டானது. மெக்கானிக் செட்டிற்கு போனபோது ஒரு சுத்தியலால் தட்டி அதை சரி செய்து விட்டார். எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. காரணம் அந்த மனிதனுக்கு அந்தக் காரை பற்றி தெரிந்திருந்தபடியால் மிக எளிதாக அதை சரி செய்து விட்டார். அதேபோல தான் நம்முடைய ஆண்டவராகிய தேவனும் அவரே நம்மை படைத்தவர், நம்மை உண்டாக்கினவர், அவரால் நம்மை உருவாக்க முடியும் பழுதடைந்த, ரிப்பேரான நம்முடைய வாழ்வை சரி செய்ய முடியும், சரியாக இயங்க வைக்க முடியும். அதற்குத்தான் அவர் நம்மை பாடுகளின் பாதையில், துன்பத்தின் பாதையில், நம்மை நடத்தி நம்முடைய இருதயத்தில் உள்ள ஓட்டைகள், குறைகள், தவறுகள் எல்லாவற்றையும் நாமே கண்டு பிடித்து சரி செய்யும்படி நம்மை உபத்திரம் என்னும் குகை யிலே சுத்தம் செய்கிறார். அப்பொழுது தான் பிறர், மற்றவர்கள் நம்மை குற்றப் படுத்தாதபடி நம்மை நாமே சரி செய்து கொள்ள உணர்த்துகிறார். இதைத் தான் **உபா 8:2-ல் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிறுமைப்படுத்தும்படிக்கும் அவருடைய கட்டளையை கைகொள்வாயோ கைகொள்ள மாட்டாயோ என்று அவர் உன்னை சோதித்து உன் இருதயத்தில் உள்ளதை நீயே அறியும்படிக்கு உன்னை இந்த 40 வருஷமாய் வனாந்தரத்தில் நடத்தி வந்த எல்லா வழியையும் நினைப்பாயாக.**

> **சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்றார்**

நம்மை சரி செய்ய எதை உடைக்க வேண்டும், எதை நொறுக்க வேண்டும் எதை விட வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம் நொறுக்கப்பட்டு, உடைக்கப்படும் போது தான் மற்றவர்களுடைய உபத்திரவம், பாடுகள், வேதனை, வலியை நம்மால் அறிய முடிகிறது, உணர முடிகிறது. விளங்கிக் கொள்ள முடிகிறது. இளகிய, மென்மையான இருதயம் நமக்கு உண்டாகிறது. தான் இயேசு அந்த பாதையில் கடந்து போனார். நமக்காக அவர் இருதயம் நொறுக்கப்பட்டது. **ஏசா 53:10-ல் கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரை பாடுகளுக்கு உட்படுத்தினார்** என்று சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய கடின இருதயம், முரட்டு இருதயம், பிறரை காயப்படுத்துகிற இருதயம் மாற வேண்டும். மென்மையான, பாரமில்லாத, சுமை இல்லாத இருதயம் நமக்கு வேண்டும். இதற்குத் தான் நாம் உடைக்கப்படுகிறோம், நொறுக்கப்படுகிறோம். சங் 51:17 இதைத் தான் தாவீது சொல்லி ஜெபிக்கிறார், தன்னை தேவனிடம் அர்ப்பணிக்கிறார். தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் என்று மென்மையான இருதயத்திற்கு தாவீது தன்னை அர்ப்பணிக்கிறார். இப்படிப்பட்ட இருதயம் உள்ளவர்கள் தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கும் போது அது அவர்களை உயிர்ப்பிக்கிறது, அனல் மூட்டுகிறது. அந்த வார்த்தையின் வல்லமை அவர்களுக்குள் இறங்குகிறது. அப்பொழுது தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் தங்களை அர்ப்பணிக்கிறார்கள்.

இதைத்தான் **ஏசாயா 66:2-ல் பார்க்கிறோம் என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்;** ஆனாலும்



சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்றார். அதனால் தான் இயேசு திராட்சப்பழம் எப்படி கசக்கி பிழியப்படுமோ அப்படியே தன் வாழ்க்கையை நமக்காக கசக்கி பிழியப்பட தம்மை ஒப்புக்கொடுதார், நமக்காக அவர் தண்டனையை ஏற்றுக் கொண்டார். இன்றைக்கு அவரால் நம்மை சரிப்படுத்த முடியும். நம்முடைய இருதயத்தை சதையான, பரிசுத்தமான, மென்மையான இருதயமாக மாற்ற முடியும். அப்படிப்பட்ட மென்மையான இருதயமாக மாற்றப்படும் போது நம்முடைய இருதயம் கர்த்தருடைய வசனத்திற்கு நடுங்கு கிறது, செவி கொடுக்கிறது, கீழ்படிகிறது. **ஏசா 57:15 சொல்லுகிறது நித்திய வாசியும் பரிசுத்தர் என்கிற நாமமும் உள்ளவருமாகிய மகத்துவமும் உன்னத முமானவர் சொல்கிறார் உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற் கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும் நொறுங்குண்டு பணிந்த ஆவி உள்ளவர்களிடத்தில் வாசம் பண்ணுகிறேன்** என்றார். என் ஆண்டவராகிய தேவன் தாமே பணிந்த இருதயம், தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுக்கிற, நடுங்குகிற இருதயத்தை கொடுத்து அவருக்கு ஏற்ற இருதயம் உள்ளவர் களாக உங்களை மாற்றுவாராக. மென்மையான, சாந்தமுள்ளவர்களாக மாற்றுவாராக, ஆசீர்வதிப் பாராக!





**ஒவ்வொரு மணித்துளிக்கும்**

**ஒரு ஆத்துமா**

**1** மணித்துளி
ஆத்துமா
ரூபாய்

இந்த உன்னதமான சுவிசேஷ ஊழிய திட்டத்தில் எங்களோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்!

ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா என்றால் ஒரு மாதத்திற்கு 744 மணி நேரம்

மாதந்தோறும் உங்களால் முடிந்த ஆத்துமாக்களை இந்த கடைசி கால சுவிசேஷப் பணியில் தாங்க முன் வாருங்கள்.

இணையதளம் மூலமாக தாங்கிட
**G pay 9443009333**

சகோதரி
கலா வின்சென்ட்ராஜ்

# பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி (இயேசு)



**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்! இந்த செய்தியின் வழியாய் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.**

நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி, ஜீவன் தந்த இயேசு, நமது பாவங்களை சுமந்து, தமது தூய இரத்தத்தால் நமது பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியானார். **1 பேதுரு 2:24-ல் நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத் திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவை யின்மேல் சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** என்று பேதுரு எழுதுகிறார். **1 யோவா 2:1,2-ல் என் பிள்ளைகளே நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்.** ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபராய் இருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவின் இடத்தில் பரிந்து பேசுகிறவரா யிருக்கிறார். **நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே.** நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல. சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாய் இருக்கிறார்.

ஆதாம் ஏவாள் தேவ கட்டளையை மீறி பாவம் செய்தபோது மகிமையை இழந்து போனார்கள். நிர்வாணிகளாய் இருப்பதை உணர்ந்தார்கள். தேவ சமூகத்தில் நிற்க முடிய வில்லை. அவரது சத்தத்தை தோட்டத்தில் கேட்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள். **ஆதி 3:21-ல் தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தி னார்.** தோல் உடைகளை எடுக்கும் முன்பு அங்கு ஒன்று பலியாகி இருக்கிறது. நான் படைத்த மனிதனை பாவம் அறியாத, பாவம் செய்யாதவனாய் உண்டாக்கினேன். ஆனால் அவன் மீறி விட்டான் என்று ஒரு பலியை செலுத்தி அவர்கள் நிர்வாணத்தை மூடினது போல, யோவான் நிருபத்திலும் நீங்கள் பாவம் செய்யக்கூடாது என்று தான் எழுதியிருக்கிறது. ஒருவேளை நீங்கள் ஏதாவது பாவம் செய்து விட்டால் உங்களுக்காக ஒருவர் பிதாவின் இடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் அவர் இயேசு என்று எழுதிவிட்டு நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே! நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல சர்வ உலகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாய் இருக்கிறார் என்று எழுதுகிறார்.

நமக்காக பலியான ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்து!. **யோவா 1:29-ல் யோவான்ஸ்நானகன் இயேசு வை தன்னிடத்தில் வரக்கண்டு இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்.** நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல உலகத்தின் பாவத்தை இயேசு கிறிஸ்து சுமந்து தீர்த்து தமது இரத்தத்தினால் பாவ நிவிர்த்தி செய்கிறார்.

பழைய ஏற்பாட்டில் பாவநிவிர்த்தி செய்ய ஒரு மிருகம் பலியானது. ஆடு, வெள்ளாட்டுக்கிடா. இளங்காளை இவைகளை பாவம் செய்த மனிதர்கள் கொண்டு வந்து பாவ நிவிர்த்திக்கென்று அங்கீகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலையின் மேல் வைத்து கர்த்தருடைய சந்நிதியில் அதைக் கொன்று அதின் இரத்தத்தை ஆசரிப்பு கூடாரத்தின் பலிபீடத்தில் தெளித்து தகனபலிகளையும் மற்ற பலிகளையும் செலுத்தினார்கள் என்று லேவியராகமம் முதல் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அதை கர்த்தர் செய்யும்படி சொன்னார். **லேவி 17:11-ல் மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது.** நான் அதை உங்களுக்கு பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக பாவம் நிவிர்த்தி செய்யும்படிக்கு கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காக பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே! என்று கர்த்தர் சொன்னார். பலிகள் பெருகியதே தவிர பாவங்கள் அழியவில்லை, விமோச்சனம் இல்லை. **எபி 10:9,10 தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன் என்று சொன்னார்.** இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்.

இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து நமக்காக பலியானதினால் முந்திய பலியை நீக்கினார். இயேசு கிறிஸ்து ஒரே தரம் தமது இரத்தத்தை சிந்தி அந்த இரத்தத்தினாலே நம்மை பாவங்களற கழுவி பரிசுத்தமாக்குகிறார். **வெளி 1:6 நம்மிடத்தில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மை கழுவி தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களாக ஆசாரியர்களாக்கினார்** என்று வாசிக்கிறோம். நாம் எல்லாருமே பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாக இருந்தோம். கிறிஸ்து இயேசுவின் கிருபையால், நாம் நீதிமான் களாக்கப்பட்டோம் என்று பவுல் ரோம 3:23-26 வரை சொல்கிறார். தேவன் முற்காலத்தில் நாம் நடந்த பாவ வாழ்க்கையை பொறுத்துக் கொண்டதைப் பற்றி, தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவர்களை நீதிமானாக்குகிற வருமாய் கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தை பற்றும் விசுவாசத்தினாலே கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் என்று எழுதுகிறார். **1 யோவா 4:10 நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக தம்முடைய குமாரனை அனுப்பி னதினாலே அன்பு உண்டாயிருக்கிறது என்கிறார்.** இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை விசுவாசிக்கிற, விசுவாசத்தினாலே நாம் பாவங்கள் நீக்கப்பட்டு, நிவிர்த்தி செய்யப்பட்ட நீதிமான்களாய் மாறுகிறோம். இன்னும் நாம் என்ன செய்ய வேண்டும், எப்படி நமது பாவம் நிவிர்த்தி ஆகிறது என்று பார்ப்போம்.

## மனம் திரும்புங்கள்

பேதுரு, **அப் 3:20-ல் உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யபடும் பொருட்டு நீங்கள் மனம் திரும்பி குணப்படுங்கள் என்கிறார்.** மனம் திரும்புவது வேறு! குணப்படுவது வேறு. மனம் திரும்புவது ஏற்கனவே செய்தவைகளை அறிக்கை செய்து விட்டு விடுவது. குணப்படுவது என்றால் இனி அதை செய்யாமல் நற்காரியங்களை செய்யத் துவங்குவது, மறுதலித்து பின்வாங்கினவன் பேதுரு. அவன் போவான் என்றும் அதன் பின்பு அவன் குணப்படுவான் என்றும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். **லூக் 22:32 நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.** அதன்படியே பேதுரு குணப்பட்டு விட்டான், நம்மையும் இயேசு கிறிஸ்து பாவங்களை மன்னித்து குணமாக்குவார், நீதிமான்களாய் மாற்றுவார். லூக் 7:37 முதல் வாசிக்கிறோம் பாவிப்பெண் ஒருத்தி இயேசுவிடம் வந்து அழுது, அவருடைய பாதத்தை கண்ணீரினால் நனைத்து தலை

மயிரினால் துடைத்து, பாதத்தை முத்தம் செய்து, பரிமள தைலம் பூசினபோது இயேசு அவள் கிரியையை பாராட்டி, அவள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். நமது வாழ்வையும் ஆராய்ந்து பார்த்து முழு மனதோடு கிறிஸ்துவிடம் திரும்பினால் நம்மையும் மன்னித்து மேன்மையாக வைப்பார்.

இஸ்ரவேலர் சித்தீமில் தங்கியிருக்கையில் வேசித்தனம் பண்ணினார்கள். துணிந்து விக்கிரகங்களுக்கு படைத்ததை புசித்தார்கள். ஒருவன் ஒரு பெண்ணை வேசித்தனம் பண்ண இழுத்துக் கொண்டு போகும்போது பினெகாஸ் ஒரு ஈட்டியை கையில் பிடித்து இருவருடைய வயிற்றில் உருவி போகும்படி குத்திப் போட்டான். அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது. எண் 25:13 அவன் தேவனுக்காக பக்தி வைராக்கியம் காண்பித்து இஸ்ரவேல் புத்திரருக்காக பாவ நிவிர்த்தி செய்தபடியால் அவனுக்கும், அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரியப் பட்டமும், என் உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொன்னார். பாவம் வல்லமை உங்களுக்குள்ளோ, மற்றவர்களுக்குள்ளோ காணப்படும் போது தைரியமாய் இயேசுவின் நாமத்தில் குத்தி போடுங்கள். அதனால் நித்திய ஆசாரிய பட்டமும், தேவனால் நமக்கு உடன்படிக்கையாய் ஆண்டவர் செய்திருக்கிறார். **சங்கீதம் 65:3-ல் அக்கிரம விஷயங்கள் என் மேலே மிஞ்சி வல்லமை கொண்டது. தேவரீரோ எங்கள் மீறுதல்களை நிவிர்த்தி ஆக்குகிறீர்** என்று சங்கீதக்காரன் சொல்கிறான். எத்தனையோ காரியங்கள், அக்கிரம விஷயங்கள், மீறுதல்கள் நம்மையும் மிஞ்சிக் கொள்கிறது. விரும்புகிற நன்மையை செய்யாமல் விரும்பாத தீமைகளையே நாமும் செய்கிறோம். ஆனால் இயேசுவே, என்னை மன்னியும், என்னை என் ஆத்துமாவை குணமாக்கும் என்று நாம் கெஞ்சும் போது ஆண்டவர் நம் மீறுதல்கள் எல்லாவற்றையும் நீக்கி நிவிர்த்தியாக்குகிறார்.

## ஜெபம் பண்ணுங்கள்

சங்கீதக்காரன் **சங் 79:8,9-ல் பூர்வகாலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும். உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக! நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு போனோம். எங்களை இரட்சிக்கும் தேவனே! நீர் உமது நாமத்தின் மகிமையின் நிமித்தம் எங்களுக்கு உதவி செய்து உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும் என்று ஜெபிக்கிறான்.** உமது இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக! எங்களை இரட்சிக்கும் தேவனே! உமது நாமத்தினிமித்தம் எங்களுக்கு உதவி செய்து விடுவித்தருளும். எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும் என்று ஜெபம் பண்ணின சங்கீதக்காரன் போல எந்த காரியத்தில் ஆபத்தில், தீங்கில் சிக்கி இருக்கிறோமோ அதில் உமது இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக என்றும், உம் நாமத்தின் நிமித்தம் எங்களுக்கு உதவி செய்யும் என்றும், நாம் ஜெபிக்கும் போது கட்டாயம் நம் ஜெபத்தை ஆண்டவர் கேட்பார்.

மோசேக்கு விரோதமாக கோகத்தின் புத்திரர் எழும்பின போது கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் எழும்பினது. திரும்பவும் அவர்கள் மோசேக்கு எதிராக பேசினார்கள். கர்த்தர் எழுந்தார் மோசேயும் ஆரோனும் முகம் குப்புற விழுந்தார்கள். எண் 16:46,47,48 மோசே ஆரோனை நோக்கி நீ தூப கலசத்தை எடுத்து பலிபீடத்தில் இருக்கிற அக்கினியை அதில் போட்டு அதின் மேல் தூபவர்க்கமிட்டு சீக்கிரமாய் சபையின் இடத்தில் போய் அவர்களுக்காக பாவ நிவிர்த்தி செய். கர்த்தருடைய கோபம் எழும்பி விட்டது என்றான். அப்படியே ஆரோன் சபையின் நடுவே ஓடி தூபவர்க்கம் போட்டு உயிரோடு இருக்கிறவர்களுக்கும் செத்தவர்களுக்கும் நடுவே நின்றான் வாதை நிறுத்தப்பட்டது. தேவகோபம் விலகிற்று. தேவகோபம் விலக தூபம் போல் நாம் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். ஏதோ ஒரு ஆபத்தில் நாம் அகப்பட்டு விட்டோம். துன்பம், பணம் நெருக்கடி, தேவைகள், தாமதமாகி கொண்டிருக்கிற காரியங்கள், சத்துருவின் போராட்டங்கள் எதுவானாலும் மனம் தளராமல் சோர்ந்து போகாமல் கர்த்தாவே எங்களுக்கு இரங்கும், உமது இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக. இயேசு என்ற உமது நாமத்தின் நிமித்தம் எங்களுக்கு உதவி செய்து எங்களை விடுவியும்.

நாங்கள் உமக்கு விரோதமாய் செய்த எங்கள் பாவங்களை மன்னித்து, அதனால் வரும் சாபங் களை, தேவ கோபங்களை எங்களை விட்டு அகற்றும் என்று பலிபீடத்தின் அக்கினி பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு ஜெபம் பண்ணுங்கள். அவரால் முடியும் என்று. அவர் நமக்குள் துவக்கும் விசுவாசத் தோடு தூப கலசத்தில் துதிகளையும், ஸ்தோத்திரங் களையும் சேர்த்து விண்ணப்பம் பண்ணுங்கள். ஜெபத்தை கேட்கிறவர் நமக்கு பதில் அளிப்பார், உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்.

## சத்தியத்தை அறியுங்கள்

சாலமோன் நீதிமொழிகளில் அநேக காரியங் களை சொல்கிறான். **நீதி 16:6 கிருபையினாலும், சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தி ஆகும்.** கர்த்தருக்கு பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் அவர் கண்களில் நமக்கு கிடைக்கிற இரக்கத்தினால் பாவம் நிவர்த்தி ஆகும். அந்தக் கிருபையை நாம் பெற்றுக் கொள்ள சத்தியத்தினால் அதை அறிந்து கொள்கிறோம். வேதத்தின் வார்த்தைகள் ஒவ்வொரு முறையும் நம்மோடு பேசி நம்மை சுத்திகரிக்கிறது. ஜெபம் பண்ணும் போது **யோவா 17:17 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்** என்று ஜெபம் பண்ணினார். வேத வசனம் நம்மை பரிசுத்த மாக்கும். கிருபையும் வேண்டும் சத்தியமும் வேண்டும். விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை பார்த்து நான் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்க மாட்டேன் என்றது கிருபை! இனி பாவம் செய்யாதே! என்றது சத்தியம்.

திமிர்வாதத்தினால் 38 ஆண்டுகள் படுக்கையில் இருந்தவனைப் பார்த்து இதோ சொஸ்தமானாய்! இது கிருபை! அதிக கேடானது ஒன்று உனக்கு வராதபடி இனி பாவம் செய்யாதே! இது சத்தியம்! **யோவா 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி கிருபை யினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்** என்ற வசனத்தின்படி கிறிஸ்து இயேசு கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள் வாசம் பண்ணும் போது அந்த சத்தியத்தை நான் புரிந்து கொண்டு இதன்படி நான் நடக்க வேண்டும். இதை செய்யக்கூடாது என்று அறிந்து தீமையை விட்டு விலகி நன்மை செய்யும் போது பாவம் நம்மை மேற்கொள்ளாது. ஒருவேளை மேற்கொண்ட பாவம் நிவிர்த்தியாகும்.

பிறக்கும் ஆண் பிள்ளைகளைக் கொன்று போட சட்டம் அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டபோது மருத்துவச்சிகள் கர்த்தருக்கு பயந்ததினால் கொலை செய்யாதிருப்பாயாக என்ற சத்தியத்தை அறிந்ததினாலே ஆண் பிள்ளைகளை உயிரோடு காப்பாற்றினார்கள். அவர்கள் குடும்பங்கள் தழைத்தது.

**எபி 4:15,16 நம்முடைய பலவீனங்களை குறித்து பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல் எல்லா விதத்திலும் நம்மை போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராய் இருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்.** ஆதலால் நாம் இரக்கத்தை பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டை யிலே சேரக்கடவோம் என்ற சத்தியம் தாவீதுக்கு தெரிந்ததினாலே அவன் ஒரு பாவத்தில் விழுந்த போது சங் 51 முழுவதும் கண்ணீரோடு எழுதி ஆண்டவரை கிட்டிச் சேர்ந்தான். 4-ம் வசனத்தில் தேவரீர் ஒருவருக்கே விரோதமாய் நான் பாவம் செய்து உமது கண்களுக்கு முன்பாக பொல்லாங் கானதை நடப்பித்தேன். நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயம் தீர்க்கும் போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன் என்றும், தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவன் இரக்கத்தை பெறுவான் என்ற வார்த்தையின்படி தேவனிடம் கிட்டிச் சேர்ந்து இரக்கத்தை பெற்று விட்டான். நாமும் கூட சத்தியத்தை அறியும்போது நமது பிரச்சனைக்கு என்ன வார்த்தை கொடுக்கப்பட்டிருக்கிறது நாம் எதில் சீர்பட வேண்டும் நற்காரியங்களை செய்ய வேண்டும் என்று தெரிந்து கொண்டு வாழும் போது நம் பாவங்கள்,

மீறுதல்கள் நிவிர்த்தியாகும். நாம் கர்த்தருக்கு பயப்படுவதனால் தீமையை விட்டு விலக ஆரம்பிப் போம். **ஏசா 60:21 உன் ஜனங்கள் யாவரும் நீதிமான்களும் என்றைக்கும் பூமியை சுதந்தரிக்கும் குடிகளும், நான் நட்ட கிளைகளும், நான் என் கிரியைகளுமா யிருப்பார்கள்.** மகிமைப்படும்படி கரங்களின் உன் ஜனங்கள் நீதிமான்களாய் இருப்பார்கள்.

பூமியை சுதந்தரிக்கும் குடிகளாய் நான் நட்ட கிளைகளாய் நான் மகிமைப்படும்படி என் கரங்களின் கிரியைகளுமாய் இருப்பார்கள். நம் தேவன் நித்திய வெளிச்சமாய் இருக்கும்போது நம் துக்கநாட்கள் முடிந்துபோம். இதற்கு முன்னால் நீதிமான்களாய், கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகினார்களோ, இல்லையோ இனி தீமையை விட்டு விலகுவார்கள். பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

நான் நட்ட கிளைகளாய் இருப்பார்கள். நான் மகிமைப்படும்படி என் கரங்களின் கிரியைகளுமாய் இருப்பார்கள் என்று கர்த்தர் சொல்கிறார். ஏசா 40:1,2 என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள். எருசலேம் உடன் பட்சமாய் பேசி அதில் போர் முடிந்தது என்றும் அதன் அக்கிரமம் நிவிர்த்தி ஆயிற்று என்றும் அது தன் சகல பாவங்களின் நிமித்தம் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும் அதற்கு கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார் என்ற வார்த்தை யின்படி இதுவரை பாவங்களை, சாபங்களை, சத்துருக்களை சந்தித்து போராடின நம் போர் முடிகிறது. சில சிட்சைகள் வழியாய் நாம் போக நேர்ந்திருந்தாலும் யோபுவுக்கு சிட்சைக்குப் பின், சிறையிருப்புக்கு பின் ஆசீர்வாதம் வந்தது போல, நம் பாவங்களை, சாபங்களை சுமந்து தீர்த்த இயேசு பரிகாரம் செய்ததால் நாமும் இந்த அத்தனை பாடுகளில் இருந்தும் மீட்கப்படுவோம். ஆண்டவர் தாமே இதை வாசிக்கின்ற ஒவ்வொருவர் வாழ்விலும் இயேசுவின் சிலுவையினால் உண்டான ஆசீர் வாதத்தை அனுபவிக்க செய்வாராக!




## என் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகள்

## "என் பிள்ளைகள்" ஆசீர்வாத ஜெபத்திட்டம்

1. உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.
2. உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை குறித்த கலக்கம் மற்றும் பயம் நீங்க,
3. அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற.
4. வயதுவரம்பு 24 வரை

**இன்றே இணைந்திடுங்கள் உங்கள் பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்காக அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.**

இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள்

**9442800449, 9442800447**

Watsapp மூலம் இணைய

**9442800447**








## வானத்தின் வாசலில் நடைபெற்ற

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 25 ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை மற்றும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நமது வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் வைத்து உபவாச ஜெபங்களை நடத்த தேவன் கிருபை செய்து வருகின்றார். கடந்த மாதத்திலும் நடந்த ஜெபத்திற்கு பல மாவட்டங்களில் இருந்து புதிய மக்களை தேவன் அழைத்து வந்தார். இந்த உபவாச ஜெபத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேவன் வல்லமையாக செயல்பட்டு மக்களை ஆற்றி, தேற்றினார். நம் சகோதரி. கலா வின்செண்ட்ராஜ் அவர்கள் பாடல் ஆராதனையை நடத்தி, ஜனங்களை தேவபிரசன்னத் திற்குள்ளாக அழைத்துச் சென்று ஆவியில் களிகூரச் செய்தார்கள். அவர்கள் கூறின தேவ வார்த்தைகள் ஒவ்வொன்றும் அநேகரை பெலப்படுத்தியது. மேலும் நம் சகோதரர். வின்செண்ட்ராஜ் அவர்கள் தேவனுக்கேற்ற இருதயம் என்ற தலைப்பில் நம் ஒவ்வொருவரின் இருதயமும் எப்படி இருக்க வேண்டும் என்று தேவ ஆவியானவரின் மூலம் வந்திருந்த மக்களுக்கு தெளிவாக பேசினார்கள். ஒவ்வொருவரின் இருதயமும் உடைக்கப்பட்டு தேவனோடு ஒப்புரவானார்கள். மேலும் அநேக ஜீவனுள்ள சாட்சிகளையும் தேவன் எழுப்பி, சாட்சியாக நிறுத்தினார். அவர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரம் மாத்திரமல்ல, சரீரபிரகாரமான ஆகாரமும் கொடுகக தேவன் அநுக்கிரகம் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.



சாட்சி பகுதி

# தலையை நிமிரச் செய்தவர்



## 1. சகோதரி. ஏஞ்சலின் மதுரை

நான் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தில் ஒவ்வொரு மாதமும் கலந்து கொண்டு நிறைய நன்மைகளை பெற்றுள்ளேன். இந்த ஜெபம் எனக்கும், என் குடும்பத்தினருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது. கடந்த மாதத்தில் இந்த ஜெபத்தில் கலந்து கொண்டு என் அத்தை மகன், மருமகளுக்காக ஜெபித்து விட்டு, நம் சகோதரர், சகோதரியிடமும் அவர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை தரும்படி ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் ஜெபத்திற்கு தேவன் பதிலைத் தந்தார். என் அத்தை மருமகளுக்கு குழந்தை பாக்கியத்தை கொடுத்து அவர்களை குடும்பமாக மகிழச் செய்தார். அவர்கள் மேல் இருந்த நிந்தையை மாற்றி, அற்புதம் செய்து சாட்சியாக வாழ வைத்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## 2. சகோதரி. எஸ்தர் கன்னிவாடி

என் குடும்பத்தில் நான் மாத்திரமே இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். இந்நிலையில் என் மகனுக்கு திருமண காரியத்தில் நீண்ட நாட்களாகவே தடை இருந்து கொண்டிருந்தது. 27 வயது முடிவதற்கு ஒரு மாதந்தான் இருக்கிறது என்று என் வீட்டில் உள்ள உறவுகள் எல்லாரும் பெண் தேடினார்கள். என் மகனுக்கு மூலநட்சத்திரம் இருக்கிறது அதனால் பெண் கிடைக்காது. திருமணம் நடப்பது கடினம் என்று சொன்னார்கள். நான் அவர்களிடம் கர்த்தர் என் மகனுக்கு திருமண காரியத்தை வாய்க்கச் செய்வார் என்று சொல்லி விட்டு, வானத்தின் வாசலில் நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு என் மகனுக்காக கண்ணீரோடு ஜெபித்தேன். வீட்டிலும் தினமும் அதிகாலையில் எழுந்து ஜெபித்தேன். 27 வயது முடியும் அந்த ஒரே மாதத்திற்குள் கர்த்தர் என் மகனுக்கு ஏற்ற துணையாக, இரட்சிக்கப்பட்ட ஒரு மகளைத் தந்து என் சொந்தபந்தங்களுக்கு முன்பாக எங்கள் தலையை உயர்த்தினார். கர்த்தரை நம்பினவர்களை அவர் கைவிடமாட்டார், வெட்கப்பட்டு போகவும் விடமாட்டார் என்பதற்கு எங்களை ஒரு சாட்சியாக தேவன் மாற்றினார். கர்த்தருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.

## 3. சகோதரி. சுசிலா திண்டுக்கல்

என் தம்பி மனைவிக்கு காலில் ஆணி குத்தியதால் ஏற்பட்ட புண் ஆறாமல் இருந்தது. இரத்தத்தில் சர்க்கரையின் அளவும் அதிகமாக இருந்தால் புண் நாளடைவில் பெரிதாகி காலை எடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். நான் நம்பிக்கையோடு வானத்தின் வாசலில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு, தேவன் அற்புதம் செய்ய வேண்டும் நான் சாட்சி சொல்லுவேன் என்று ஜெபித்துவிட்டுச் சென்றேன். கர்த்தர் அற்புதம் செய்தார். இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைந்து, காலில் இருந்த புண் ஆற துவங்கியது. தேவன் கிருபையினால் மருத்துவர்கள் காலை எடுக்க தேவையில்லை, புண் நன்றாக ஆறிக்கொண்டு இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். ஜெபத்திற்கு பதில் தந்து காலை எடுக்காமல் காப்பாற்றிக் கொடுத்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.

## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

### 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

### 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

### 4) GOOGLE PAY

GPAY TO , 944 300 9333,

### 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை ,
மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# செல்போனுக்கு அடிமையாதலை கட்டுப்படுத்துவது எப்படி?

நடப்பு செய்தி



குழந்தைகள் மனநல மருத்துவர்கள் கூறுகையில், செல்போனுக்கு அடிமையாவது என்பது எந்தவொரு போதைப்பொருளுக்கும் அடிமையாவதை போன்றது என்றார். 'பதின் பருவத்தினரிடம் இருந்து செல்போனை பிடுங்குவது என்பது ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு குழந்தை செல்போனுக்கு அடிமையாவது என்பது போதைப் பொருளுக்கு அடிமையாவது போன்றதுதான்.' என்றார். 'மொபைல் போனை பயன்படுத்தும் போது மகிழ்ச்சியை வரவழைக்கும் டோபமைன் ஹார்மோன் தூண்டப்படுகிறது. இது எந்தவொரு வேதிப்பொருளை போன்றும் வலிமைமிக்கது. குழந்தைகளிடமிருந்து செல்போனை பிடுங்கும்போது, அவர்களிடமிருந்து அந்த வேதிப்பொருள் விடுபடுகிறது. என்கிறார்கள்.

டெல்லியை சேர்ந்த மனநல மருத்துவர் பாவனா பார்மி விளக்குகையில், 'பள்ளிக்கு அடிக்கடி வராமல் இருப்பது, கல்வியைத் தவறவிடுவதாக அர்த்தமல்ல. மாறாக அது, மனநல ரீதியான பாதிப்புகளின் சங்கிலியை உருவாக்குகிறது. வளரிளம் பருவத்தினருக்கு பள்ளி என்பது தகவல்களை பெறும் இடமாக மட்டும் அல்லாமல், ஆரோக்கியமான வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான அமைப்பாக செயல்படுகிறது' என்றார். 'கொரிய கலாசாரத்துடன் இணைந்த பாப், தொடர்கள், அழகு சார்ந்த டிரெண்டுகள், பிரபலங்கள் ஆகியவற்றின் மீதான தீவிரமான ஆர்வம் குறித்து பல பதின்பருவத்தினர் மற்றும் குடும்பங்களுக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன், அந்த ஆர்வம் ஒரு சாதாரண ஆர்வமாக மட்டும் இருப்பதில்லை. அளவில்லாத இத்தகைய நிகழ்ச்சிகளும் ஏஜ சாட்பாட் உதவியுடன் அத்தகைய கதாபாத்திரங்கள் போன்று நடிப்பதும் இன்னும் ஆபத்தானதாக மாறலாம்.' என்றார்.

**ஜெபம் : அன்பான தேவபிள்ளைகளே தற்போது பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சோஸியல் மீடியாவில் வருகின்றதான கொரிய பாடல்கள், நாடகங்கள் நிறங்கள், அழகுசாதனப் பொருட்கள் அதிகமான தாக்கத்தையும், மனஅழுத்தத்தையும், கலாச்சார மோகத்தையும் ஏற்படுத்திவருகின்றது. இதனால் அநேக பிள்ளைகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி தற்கொலை என்ற முடிவுக்குச் சென்று உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். இந்த நிலை மாற பிள்ளைகள் பாதுகாப்பிற்காக, பிள்ளைகளை குறித்த தேவ திட்டம் நிறைவேற பாரத்தோடு ஜெபியுங்கள்.**

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: SHARON PRINT SYSTEM, NO. 51/7,AHIMSAPURAM
FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER,
SELLUR, MADURAI - 625002

## மதுரையில்

# எழுப்புதல் உபவாச ஜெபம்

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை

இடம் : இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம், பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC டிப்போ அருகில், மதுரை மாவட்டம்.

**மார்ச் 21**
**மூன்றாவது சனிக்கிழமை**



**EVG.L.வின்சென்ட்ராஜ்**
**EVG.கலா வின்சென்ட்ராஜ்**

**தொடர்புக்கு : 94428 00449, 94980 00449**

**செப்டம்பரில்**

# வேதாகம நாடுகளுக்கு பிரயாணம்-2026

**Bible Land Tour**

**சகோதரர் எல்.வின்சென்ட்ராஜ் அவர்களுடன்**

## இஸ்ரேல், ஜோர்டன், எகிப்து (10 நாட்கள்)


- ✝ தினமும் அதிகாலை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்த ஆராதனை
- ✝ யோர்தான் நதிக்கரையில் ஆராதனை
- ✝ இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த இடங்கள்
- ✝ இயேசு அற்புதம் செய்த பரிசுத்த ஸ்தலங்கள்
- ✝ கெத்செமனே தோட்டத்தில் ஜெப நேரங்கள்,
- ✝ பத்து கற்பனைகளைப் பெற்ற சீனாய் மலை
- ✝ கலிலேயா கடலில் தேவனைத் துதித்தல்,
- ✝ நைல் நதியில் படகு சவாரி.

**எங்களோடு வேதாகம தேசத்திற்கு வாருங்கள்**

உடனே நீங்கள் பாஸ்போர்ட் நகலை எங்கள் அலுவலக வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி முன்பதி செய்து கொள்ளுங்கள்.

தேதி மற்றும் கட்டணம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புக்கு : 94428 00449, 94428 00447, 94980 00449 வாட்ஸ்அப் : 94428 00447



RNI NO .TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023


வானத்தின் வாசலில்

# சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாம்

நேரம் : தினமும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை
இடம் : வானத்தின் வாசல் சுவிசேஷ மையம், செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

தேவ செய்தியாளர்கள்

தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார்
சகோ. வின்சென்ட்ராஜ்,
சகோ. கலாவின்சென்ட்ராஜ்

நாள்
ஏப்ரல் 30 &
01,02
மே 2026

முன்பதிவு அவசியம்



இந்த முகாமில் கலந்து கொள்வதற்கு முன்பதிவு செய்ய
soe.jesuslives.in

தொடர்புக்கு : 94980 00449, 94428 00449, 94428 00447


TO

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Paravai
Madurai-625402
South India.